# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**இலங்கைக்கு புதியதொகுதி நிவாரணப் பொருட்கள் விநியோகம்; சாகர் பந்து நடவடிக்கையின் கீழ் இந்தியாவின் பல்நோக்கு ஆதரவு தொடர்கின்றது**

இந்திய கரையோரக் காவல் படைக் கப்பலான சௌர்யா இந்தியாவிலிருந்து 50 தொன்கள் உலருணவு நிவாரணப் பொருட்களுடன் டிசம்பர் 15 ஆம் திகதி இலங்கை வந்தடைந்தது. இப்பொருட்கள் இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் டாக்டர் சத்யாஞ்சல் பாண்டே அவர்களால், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் கௌரவ ஜனித ருவான் கொடித்துவக்கு அவர்களிடம் கையளிக்கப்பட்டன. பேரிடரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு தற்போது வழங்கப்படும் ஆதரவை மீள வலியுறுத்தும் வகையில் இப்பொருட்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

02. முன்னதாக டிசம்பர் 14 ஆம் திகதி இந்திய விமானப்படைக்கு சொந்தமான C17 குளோப்மாஸ்டர் விமானம் 10 தொன்கள் மருந்துகள் மற்றும் 15 தொன்கள் உலருணவு நிவாரணம் ஆகியவற்றுடன் இலங்கை வந்தடைந்திருந்தது. இதேவேளை கண்டி அருகில் மகியங்கனைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இந்திய இராணுவ கள வைத்தியசாலையில் பணியாற்றிய அதிகாரிகள் தமது மனிதாபிமான பணிகள் வெற்றிகரமாக நிறைவடைந்த நிலையில் இந்த விமானம் மூலம் நாடு திரும்புகின்றனர்.

03. அத்துடன், முக்கிய இணைப்பு வீதிகளை சீரமைக்கும் முயற்சிகள் தொடர்ச்சியாக உறுதியுடன் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. சிலாபம் மற்றும் கிளிநொச்சியில் பாலங்கள் அமைந்துள்ள பகுதிகளில் முன்னாயத்தப் பணிகள் நடைபெறும் அதேவேளை, சேதமடைந்த கிளிநொச்சி பாலம் முழுமையாக அகற்றப்பட்டு பெய்லி பாலம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் தயார் நிலையில் உள்ளன. இதன் மூலம் பிராந்தியத்தில் இலகுவான போக்குவரத்து மற்றும் பிராந்தியத்துக்கான அணுகல் ஆகியவை எளிதாக்கப்படுகின்றன.

04. துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் கௌரவ அநுர கருணாதிலகே மற்றும் பிரதி உயர் ஸ்தானிகர் டாக்டர் சத்யாஞ்சல் பாண்டே ஆகியோர் பிரசன்னத்துடன், கொழும்பு மேற்கு சர்வதேச முனையம் (CWIT) "இலங்கையை மீளக் கட்டியெழுப்பல்" நிதியத்துக்கு 100 மில்லியன் ரூபா நிதி உதவியை வழங்கியிருந்தது. அதானி துறைமுகங்கள், ஜோன் கீல்ஸ் குழுமம் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபை ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு கூட்டு வர்த்தக செயற்பாடே CWIT ஆகும்.

05. இதேவேளை இந்திய கலாசார சங்கம் (ICA) கொழும்பில் ஜனசக்தி லைப் - ICA சர்வதேச அரை-மரதன் நிகழ்வினை டிசம்பர் 14 ஆம் திகதி வெற்றிகரமாக நிறைவுசெய்தது. 39 நாடுகளைச் சேர்ந்த 2,500 க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த நிகழ்வு, மெய்வல்லுனர் நிபுணத்துவம் மற்றும் அதன் மூலமான சமூக தாக்கங்கள்

ஆகியவற்றைக் கொண்டாடியது. இதன் ஆண்கள் பிரிவில் வெற்றி பெற்ற கிப்சாங் இசிபெட் மூசஸ் அவர்கள், தனது LKR 1 மில்லியன் பரிசுத் தொகையை ICA நீர் சுத்திகரிப்பு திட்டத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இந்த வருட நிகழ்வானது அளவு மற்றும் முக்கியத்துவத்தில் மேலோங்கி காணப்பட்ட அதேசமயம் இலங்கை முழுவதும் உள்ள சமூகங்களுக்கு உறுதியான நன்மைகளை வழங்குவதுடன் சர்வதேச தோழமையையும் மேம்படுத்துகின்றது.

6. டித்வா சூறாவளிக்குப் பின்னர் சாகர் பந்து நடவடிக்கையின் கீழ் இலங்கை விமானப்படையுடன் இணைந்து நெருக்கமான ஒருங்கிணைப்பில் நிவாரண நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து இறுதிவரை செயற்பட்டுவந்த இந்திய விமானப்படையின் MI-17 உலங்குவானூர்தி ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 14) தனது பணியை நிறைவு செய்தது. இந்த உலங்குவானூர்தி அதன் சிப்பந்திகளுடன் டிசம்பர் 14 ஆம் திகதி இந்தியா திரும்பியது. 2025 நவம்பர் 29 முதல், இந்திய விமானப் படையின் மூன்று உலங்குவானூர்திகளும் இந்திய கடற்படையின் இரண்டு உலங்குவானூர்திகளும் இந்த நடவடிக்கைகளில் பங்கேற்று, உயிர் தப்பிய 272 பேரை மீட்டமை, இலங்கை துருப்புகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கியமை 61 தொன்களுக்கும் அதிகமான நிவாரணப் பொருட்களை விநியோகித்தமை உள்ளிட்ட செயற்பாடுகள் மூலம் இலங்கைக்கு உதவிகள் தேவைப்பட்ட நேரத்தில் உறுதியாக ஒத்துழைத்திருந்தன.

07. சாராம்சம்: சாகர்பந்து நடவடிக்கை (2025 டிசம்பர் 17 ஆம் திகதி வரை)

2025 நவம்பர் 28 ஆம் திகதி அன்று சாகர் பந்து நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டமை முதல் இந்தியா இலங்கைக்கு 1,134 தொன்களுக்கும் அதிகமான மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளது, ,60 தொன் விசேட உபகரணங்களுக்கு புறம்பாக உலர் உணவுப் பொருட்கள், கூடாரங்கள், நிலவிரிப்புகள், சுகாதாரப் பொருட்கள், ஆடைகள், நீர் சுத்திகரிப்பு தொகுதிகள் மற்றும் 14.5 தொன் மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்டவை இதில் அடங்குகின்றன. .. இந்திய கடலோர காவல்படை கப்பல் சௌர்யாவுக்கு மேலதிகமாக, இந்திய கடற்படைக் கப்பல்களான INS விக்ராந்த், INS உதய்கிரி, INS சுகன்யா, LCU-54, LCU-57, LCU-51, மற்றும் INS கரியால் ஆகியவை கொழும்பு மற்றும் திருகோணமலைக்கு அதிக அளவிலான நிவாரணப் பொருட்களை விநியோகித்திருந்தன. தேசிய பேரிடர் மீட்புப் படையின் இரண்டு குழுக்கள் (80 பணியாளர்கள் & K9 பிரிவு ) உடனடி தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட அதேவேளை மஹியங்கனையில் அமைக்கப்பட்ட இந்திய இராணுவ கள வைத்தியசாலை 85 மருத்துவ பணியாளர்கள் மூலம் 7,000 க்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கு உயிர் காக்கும் மருத்துவ சேவையை வழங்கியது. மிக மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் BHISHM ஆரோக்கிய மைத்ரி தொகுதிகளைப் பயன்படுத்தும் மருத்துவ மையங்கள் நிறுவப்பட்டமை, முக்கியமான போக்குவரத்து தொடர்புகளை மீளமைக்க 48 பொறியியலாளர்களுடன் 248 தொன் பெய்லி பாலத்தொகுதிகள் வான்மார்க்கமாக கொண்டு வரப்பட்டன. 5 இந்திய விமானப்படை மற்றும் கடற்படை உலங்குவானூர்திகள் உயிர்தப்பியவர்களை மீட்டமை, படையினருக்கான

போக்குவரத்து வசதிகளை வழங்கியமை மற்றும் நிவாரணப் பொருட்களை விநியோகித்தமை போன்ற பணிகளில் ஈடுபட்டிருந்தமையானது நெருக்கடியான நேரத்தில் இலங்கைக்கு இந்தியா வழங்கும் உறுதியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றது.

***************

**கொழும்பு**
**17 டிசம்பர் 2025**